## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

**அசல் வழக்கு எண். 61/2022**

வாக்குமூலம். வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுதாகர் | ஜாதி | |
| த/பெ. | காளிமுத்து | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 42 /2024 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 06.08.2024 ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தாவா வழக்கின் வாதி. என்னால் தாக்கல் செய்யப்படும் நிரூபண வாக்குமூலத்தை என் தரப்பு முதல் விசாரணையாக ஏற்க வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். பட்டா எண். 2281 க்கான கணிணி சிட்டா கணிணி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புல எண். 338/1B க்கான என் தகப்பனார் பெயரில் ஏற்பட்ட மனைவரி தோராய பட்டா அசல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 10.03.2010, 22.01.2018, 01.12.1986, 25.11.1983, 31.03.1986, 31.03.2021 ஆகிய தேதிகளிட்ட என் தகப்பனார் பெயரில் ஏற்பட்ட வீட்டுவரி ரசீதுகள் எண்ணிக்கை 6 தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 3 வரிசை எண்ணிக்கை 6 ஆக குறியிடு செய்யப்படுகிறது. 26.03.2022 தேதிய அரசர்குளம் குறுவட்ட சார்ஆய்வாளரின் அறிவிப்பு சார்வு செய்யப்பட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**